# நந்தி

மாலை 3 | 1966 பிப்ரவரி
விசுவாவசு, தை. | மணி 4

## சமாதான வீரர் மறைந்தார்

மனிதர் குல மாணிக்கம், ஆசியாவின் ஜோதி, பாரதத்தின் பேரொளி, ஜவஹர்லால் நேரு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் மறைந்தபோது பாரத நாட்டை இருள் சூழ்ந்தது. பாரத மக்கள் விம்மி, விம்மி அழுதனர். இருள் நீங்கி, ஒளி வீசுமா என்று ஏங்கித் தவித்தனர்.

இறைவன் திருவருள் நாட்டிற்கு எப்பொழுதும் உண்டு என்பதை நிரூபிக்கும் அளவில் திரு. லால்பகதூர் சாஸ்திரி பாரதத்தின் பிரதமராக வந்தார். எளிய வாழ்க்கை வாழ்ந்து, மக்களுக்கு எடுத்துக் காட்டாக, தன்னலமின்றி, மக்களின் துயரைத் துடைக்க கங்கணம் கட்டிக்கொண்டு அரசுரிமை செலுத்திய சமாதான வீரர் மறைந்தார் என்ற செய்தி நாட்டையே கலக்கி விட்டது.

பகைமை பாராட்டியவருடன் சமரசம் பேசி, சமாதானப் பிரகடனத்தில் கையொப்பமிட்ட சில மணி நேரத்திற்குள் மீளாத் தூக்கத்திலாழ்ந்து விட்டார். தியாகத்தின் சிகரத்தை எட்டிப்பிடித்து விட்டார். இந்த வீரரின் ஆன்மா சாந்தி யடைவதாக. அவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

## புதிய பிரதமர்

நாடு சோகத்தில் ஆழ்ந்துள்ள இத் தருணத்தில், ஆசிய ஜோதி நேருவின் தவப் புதல்வி திருமதி. இந்திரா காந்தி பாரதத்தின் புதிய பிரதமராக பதவி ஏற்றார். அவரை வரவேற்கிறோம்.

உண்ண உணவின்றி, உறங்க இடமின்றி, படுக்கப் பாயின்றி, தவிக்கும் பாரத நாட்டு ஏழை மக்களைக் காப்பாற்ற அவருக்கு இறைவன் உறுதுணை யிருக்கட்டும்.

## விமோசனம் கிடைக்குமா?

நான்காவது ஐந்தாண்டு திட்டம் வெகு விரைவில் தொடங்கப் போகிறது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழகத்திற்கு நாட்டு வைத்திய வளர்ச்சிக்காகவும், ஆராய்ச்சிக்காகவும் மத்திய அரசினரால் ஒதுக்கப்பட்டு, அளிக்கப்பட்ட பல இலட்சம் ரூபாய்கள், குறிப்பிட்ட திட்டத்திற்காக செலவழிக்கப்படாமல், மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக செலவழிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த புண்யப் பணியைச் செய்வதற்கு உதவியவர் தமிழக அரசில் மருத்துவத் துறை இயக்குனர் பதவி வகித்துவரும் அம்மையார், நாட்டு வைத்தியத்தை நசுக்கும் பணியில் ஆர்வம் கொண்டவர். அவர் நீடூழி வாழட்டும்.

நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலாவது விமோசனம் கிடைக்குமா? நாட்டு வைத்திய ஆராய்ச்சிக்கு பொருள் செலவிடப்படுமா? அதற்கான திட்டத்தை உருவாக்கி மத்திய அரசுக்கு அனுப்ப தமிழக அரசாங்கம் முன் வருமா? நாட்டு மருத்துவத்திற்காக பிரத்தியேகமான ஒரு டைரக்டரை அரசினர் ஏற்படுத்தினுல்தான் பலன் கிடைக்கும். ஆண்டவன் தான் துணை செய்யவேண்டும்.

## மருத்துவப் பெரியார் வைர விழா

தமிழக மருத்துவப் பெரியார், பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுக்கு தொண்ணூறு வயது நிரம்பி விட்டது. பழைய தலைமுறை வைத்தியர்களில் இப்பொழுது நம்மிடையே யிருக்கும் ஒரு சிலரில் பண்டித ஆனந்தமும் ஒருவர். அவர்கள் மருத்துவ சமூகத்திற்கும், தமிழ் சித்த வைத்தியத்திற்கும் செய்துள்ள தொண்டை தமிழகம் போற்றிப் பாராட்ட வேண்டியதவசியம். இதற்கென ஒரு வைர விழா நடத்த அன்பர்கள் பலர் முயற்சி செய்து வருகின்றனர். தமிழ் மக்கள் அனைவரும் வைர விழா வெற்றியுடன் நடப்பதற்கு தக்க பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

## கவிராஜ் வைத்தியர்கள் சங்கம்

சென்னை, ராயப்பேட்டை, பைக்கிராப்ட்ஸ் சாலையில் உள்ள கவிராஜ் வைத்தியர்கள் சங்கத்தின் சிறப்புக் கூட்டமொன்று அண்மையில் நடை பெற்றது. இந்திய மருத்துவக் கல்லூரியின், ஓய்வுபெற்ற ஆயுர்வேதப் பேராசிரியரும், அடையார் கூட்டுறவு மருந்து செய் நிறுவனத்தின் தலைவருமான டாக்டர் வி. நாராயணசாமி ஐயர் தலைமை வகித்தார். டாக்டர் ஆனந்த குமார் வரவேற்புரை வழங்கினர். இந்திய மருத்துவக்

கல்லூரியின் ஓய்வுபெற்ற. சித்தா பேராராய்ச்சியாளர் டாக்டர் க. சு. உத்தமராயன் அவர்கள், சங்கத்தின் முன்னுள் துணைத் தலைவர் அமரர் கவிராஜ் டாக்டர் வில்லியம்ஸ் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். தவத்திரு - சுந்தரானந்த சரசுவதி அடிகள், சங்கத்தைப் பலப்படுத்தவேண்டிய தனவசியத்தைப்பற்றியும், எல்லா வைத்தியர்களும் ஒற்றுமையுடன் பாடுபட வேண்டுமென்றும் பேசினர். தலைவர் பேசுகையில், தமிழகத்தில், நாட்டு வைத்திய வளர்ச்சிக்காக மத்திய அரசினர் மூன்ருவது ஐந்து ஆண்டு திட்டத்தில் அளித்த பல லட்சம் ரூபாய் மான்யம், மலேரியா ஒழிப்பு வேலைக்காக செலவிடப்பட்ட தென்றும், தமிழக அரசினர் சரியான ஆராய்ச்சி திட்டத்தை வகுத்து மத்திய அரசினருக்கு அனுப்பாமல் பின்தங்கி விட்டனரென்றும், நாட்டு வைத்தியத் துறையின் நிர்வாகம் நவீன மருத்துவ நெறியாளரிடம் இருப் பதுதான் இதற்குக் காரணமென்றும், நாட்டு வைத்தியத் துறைக்குப் பிரத்தியேகமான டைரக்டர் ஒருவர் இருக்கவேண்டியதவசியமென்றும் கூறினர். செயலாளர் கவிராஜ். கே. அரங்கசாமி நன்றியுரையுடன் கூட்டம் கலைந்தது.

## நடைபாதைத் தொல்லை

சென்னை நகரிலுள்ள நடைபாதைகள் (Pavements) மிக்க சீர் கேடான நிலைமையிலிருக்கின்றன. பல இடங்களில் சிமின்டு பலகைகள் இல்லை. மனிதனை பாதாளத்திற்கு அழைத்துப்போகும் குழிகள் இருக் கின்றன. இருட்டில் நடக்கும் மனிதன் கதி, அதோகதிதான். மின்சாரக் கட்டுப்பாட்டின் காரணமாக விளக்குகள் அணைக்கப்படுவதால் பாத சாரிகள் எல்லைகடந்த துன்பத்தை அனுபவிக்கிருர்கள். நடைபாதை களில் நடக்க இடமின்றி கடைகள், எந்த சட்டமும், அதிகாரமும் இக் கடைகளை அப்புறப்படுத்த முடியவில்லை. எல்லோரும் ஜீவாதார உரிமை கொண்டாடும் ஜனநாயக உலகத்தில் நாம் வசிக்கிருேம். ஒவ்வொரு பள்ளி வாசலிலும், மாங்காய், வேர்க்கடலை, ஐஸ்கிரீம் விற்கும் வியாபாரிகள், பள்ளி மாணவர்கள் திரளாக வந்து இவற்றை வாங்கி யுண்கிருர்கள். இதனுல் எத்தனையோ விதமான நோய்கள் இளம் பிள்ளை களை வாதிக்கிறது. சுகாதாரச் சட்டம் என்னவோ வெகு அழகாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது; அது அமுலில்தான் இல்லை.

சென்னையிலுள்ள பிரபல ஆங்கில தினத் தாள் "மெயில்" இந்த அவலநிலையைப் படம் பிடித்துப் பிரசுரித்து வருவதை மிகவும் பாராட்டு கிருேம். அதிகாரிகள் நடைபாதைத் தொல்லையை நீக்கி, மக்கள் துன்ப மின்றி நடக்க வழி செய்வார்களென்று நம்புகிருேம்.

மருத்துவ ஞாயிறு, ராஜவைத்திய

பண்டித

# எஸ். எஸ். ஆனந்தம்

அவர்கள்

?

**1915-ம் ஆண்டு தென் இந்திய சித்த வைத்திய சங்கத்தை தோற்றுவித்தவர், அதன் தலைவர்.**

தென் இந்திய மருத்துவகுல சங்கத்தை நிறுவியவர் சென்னை நகரசபை முன்னாள் உறுப்பினர், தமிழர் பேரவையைத் தோற்றுவித்தவர், அதன் செயலாளர்.

சென்னை அரசாங்க இந்திய மருத்துவ மத்திய போர்டின் முன்னாள் உறுப்பினர்

சென்னை அரசாங்க இணைப்பு வைத்தியக் கல்லூரியில் படித்துத் தேறிய எல். ஐ. எம்., எச். பி. ஐ. எம்., ஜி. சி. ஐ. எம்., பட்டதாரிகளின் எக்சாமினர்.

சென்னை அரசாங்க இணைப்பு மருத்துவக் கல்லூரியில் சித்த வகுப்பைத் தோற்றுவித்தவர்.

சென்னை இணைப்பு மருத்துவக் கல்லூரியின் மருத்துவ சாலை, சென்னை அடையாறு புற்று நோய் ஆஸ்பத்திரி,

*கோயமுத்தூர் ஜி. டி. நாயுடுவின் ஆராய்ச்சி நிலையம் இவற்றில் கௌரவ வைத்தியராகவும், ஆராய்ச்சியாளராகவும் இருந்தவர்*

தமிழ்நாடு நாட்டு மருத்துவர்கள் மத்திய சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவர்.

சென்னை, தியாகராய நகர் தமிழ் மருத்துவ சாலையின் உரிமையாளர்.

இவருக்கு

## தொண்ணூறு ஆண்டு நிரம்பிவிட்டது.

## அன்னாரின் வைரவிழா ஏற்பாடுகளின்

## இது முதல் தோற்றம்.



SREE CHITHIRA THIRUNAL

Investiture Celebrations

AGRICULTURAL, INDUSTRIAL & ARTS
EXHIBITION.
1931.

This Certificate Of Merit

Has been awarded

TO Pandit S. S. Anandan

FOR [illegible]

TRIVANDRUM. [illegible]

PRESIDENT
EXHIBITION COMMITTEE



தொண்ணூறு வயது நிரம்பிய

மருத்துவ ஞாயிறு, ராஜவைத்திய

**பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள்**

இவருடைய வைரவிழா அண்மையில் சென்னையில்
சிறப்புற நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

# தமிழ் மருத்துவப் பெரியார்

# பண்டித எஸ். எஸ். ஆனந்தம்

# அவர்களின்

# வைர விழா ஏற்பாடுகள்

---

## பூர்வாங்க ஆலோசனை

---

"ரெமிங்டன்" என்ற ஆங்கிலச் சொல்லைச் சொன்ன உடனேயே "டைப்ரைட்டர்" என்பது உங்களுடைய நினைவில் வரும். அதுபோல் தமிழ் சித்த மருத்துவம் என்று சொன்னவுடன் உங்களுக்கு **பண்டித. ஆனந்தரின்** பெயர்தான் நினைவில் வரும்.

சென்ற ஐம்பது ஆண்டுகளாக, தமிழகத்தில், தமிழ் மருத்துவ வளர்ச்சியிலும், பின்தங்கிய மருத்துவ சமூகத்தின் நலனுக்காகவும், தமிழ் சமூக முன்னேற்றத்திலும், ஈடுபட்டு, தொண்டாற்றிவரும் **பண்டித. எஸ். எஸ். ஆனந்தர்** எனும் பெரியாருக்கு தொண்ணூறு வயது நிரம்பி விட்டது.

அவர்களுடைய தொண்டைப் பாராட்டி அஞ்சலி செலுத்தும் பணியில், தமிழக மருத்துவ சிகாமணிகளும், வைத்தியப் பேரறிஞர்களும், தமிழ்க் காவலர்களும், அரசியல் தலைவர்களும் ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பது தமிழகத்தின் ஒரு நற்சகுனமாகும்.

இதன்பொருட்டு, வெகு விரைவில், சென்னை நகரில் ஒரு "வைர விழா" சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்ற நோக்கம் கொண்டுள்ள பலர் ஒன்றுகூடி ஒரு குழுவை அமைத்திருக்கின்றனர். "தென்னிந்திய மருத்துவ சம்மேளனம்" என்பது இதன் பெயர். இதனுதரவில் சென்ற 25—1—66-ஆம் நாள் சென்னை, தியாகராய நகர், இராகவய்யா வீதி, 10-ஆம் எண்ணுள்ள, பண்டித ஆனந்தரின் தமிழ் மருத்துவசாலை மாளிகையில் ஒரு பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

இக் கூட்டத்திற்கு, தமிழ் மருத்துவ அறிஞர்கள், மருத்துவ குலப் பிரமுகர்கள் முதலியோர் வருகை தந்தனர். கூட்டத்திற்கு தமிழ் மருத்துவப் பேராசிரியரும், தமிழ்நாடு, நாட்டு வைத்தியர்கள் மத்திய சங்கத் தலைவரும், தென்னிந்திய சித்த வைத்திய சங்கத் துணைத் தலைவரும், சென்னை அரசினர் இந்திய மருத்துவ மத்திய போர்டின் உறுப்பினரும், "நந்தி" சித்த வைத்தியத் திங்கள் இதழின் ஆசிரியருமான **தவத்திரு. சுந்தரானந்த சரசுவதி அடிகளார்** தலைமை வகித்தார்கள்.

முதலில் இந்தியப் பிரதமர் திரு லால் பகதூர் சாஸ்திரியவர்கள் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது. அனைவரும் ஒரு நிமிடம் மௌனப் பிரார்த்தனை செய்தனர்.

பண்டித மருதமுத்து இறை வணக்கம் பாடினார். தலைவர் தம் உரையில் கூறியதன் சுருக்கமாவது :—

"தமிழ் மருத்துவப் பெரியார் **பண்டித. எஸ். எஸ். ஆனந்தரின்** பல்லாண்டு தொண்டைப் பாராட்டி, ஒரு வைர விழா நடத்துவதற்கான, பூர்வாங்க ஆலோசனைக் கூட்டத்திற்கு விஜயம் செய்துள்ள அனைவரையும் வரவேற்கிறேன்.

**பண்டித. ஆனந்தம்** அவர்களை தமிழகம் நன்கு அறியும். கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களும், மருத்துவர்களும் நன்கறிவர். சென்ற நாற்பது ஆண்டுகளாக மருத்துவப் பெரியார் பண்டித ஆனந்தருடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவர்களில் நானும் ஒருவன். என்னுடைய இளமையில், அரசியல் பத்திரிகை யுலகில் தொண்டாற்றிக் கொண்டிருந்த என்னை, சித்த வைத்தியத்தில் ஊக்குவித்து, இந்நாளில், சித்த வைத்திய வளர்ச்சிக்காகவும், வைத்தியர்களுடைய நலனுக்காகவும் தொண்டு செய்யும் பணியில் ஈடுபடுத்திய பெருமை அவர்களுக்கே உரித்தானது.

மருத்துவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், மற்ற சமூகத்தாருக்குச் சமமாக மருத்துவ சமூகத்தாரும் வாழ்வதற்காகவும் அவர்கள் செய்துள்ள தொண்டை நாம் மறக்கமுடியாது. இதற்காக "மருத்துவன்" என்ற மாத இதழ் ஒன்றை நடத்தி வந்தார். மருத்துவ சமூகத்தின் நலனைப் பாதுகாக்கும் நற்பணியில் அவர்கள் ஈடுபட்டிருந்த காலத்தில், அவர்களுக்கு ஏற்பட்ட இடுக்கண்கள் பல. அவற்றைப் பொருட்படுத்தாமல் செய்த தன்னலமற்ற தொண்டை நாம் பாராட்ட வேண்டியதவசியம்.

சென்னையில் நாட்டு மருத்துவப் படிப்பைப் போதிப்பதற்காக, ஒரு பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் சென்னை அரசினர் "சர். உஸ்மான் கமிட்டி" என்ற குழுவை ஏற்படுத்தினர். அப்பொழுது நீதிக் கட்சி அரசுரிமையில் ஒரு பகுதியை நிர்வகித்து வந்த காலம். அந்தக்கட்சியில் பண்டித. ஆனந்தம் அவர்கள் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். தம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்திய மருத்துவப் பள்ளியில் சித்தவைத்தியப் படிப்பையும் சேர்ப்பதற்கு முக்கிய காரணமா யிருந்தார்கள்.

இந்திய மருத்துவப் பள்ளியில் படிப்பதற்குத் தேவையான பொருளாதார வசதியும், தகுதியும் இல்லாத, பரம்பரை வைத்தியர்களைத் தனியாகப் பதிவு செய்வதற்காக அரசாங்கத்தில் சலுகை பெறும் பணியில் அவர்கள் முயற்சி செய்து வெற்றி பெற்றார்கள். ஆனால் அந்த சலுகை சில ஆண்டுகளுக்குப்பின் அரசினரால் நிறுத்தப்பட்டது.

பின்னர், இந்திய மருத்துவ மத்திய போர்டில் அவர்களும், நானும் நியமனப் பதவிபெற்று உறுப்பினர்களானோம். பதிவுச் சலுகையை மீண்டும் பெறுவதற்கான முயற்சியில், எனக்கு அவர்கள் உறுதுணையாகவிருந்து வெற்றி பெற்றோம். இதன் பயனாக சுமார் 1500 வைத்தியர்கள்வரை பதிவு பெற்றார்கள். இன்றும் பலர் பதிவுக்காக விண்ணப்பித்திருக்கிறார்கள்.

1915-ஆம் ஆண்டில் அவர்கள் தோற்றுவித்த தென்னிந்திய சித்த வைத்திய சங்கம், அவர்களுடைய ஒரே குமாரர் டாக்டர் ஆனந்தகுமார் அவர்களின் நிர்வாகத்தில் திறம்பட இயங்கி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இப் பெரியாருக்கு இப்பொழுது தொண்ணூறு ஆண்டுகள் நிரம்பிவிட்டது. அவர்கள் செய்துள்ள தொண்டைப் பாராட்டி, அஞ்சலி செலுத்தவேண்டியது நம் முதற் கடமை. இதற்காக வெகு விரைவில் ஒரு வைர விழா கொண்டாட விருக்கிறோம்.

இவ் விழாவிற்குப் பொருள் தேவைப்படுகிறது. பண்டித ஆனந்தம் அவர்களின் நினைவுச் சின்னமாக ஒரு இலவச மருத்துவ நிலையம், சித்த வைத்திய ஆராய்ச்சி கூடம், மூலிகைத் தோட்டம், நூல் நிலையம், மருத்துவப் பள்ளி, பழைய நூல்களைப் பிரசுரித்தல், முதலிய பணிகளைச் செய்யவேண்டுமென்பது என்னுடைய ஆலோசனை. எல்லாம் கிடைக்கும் பொருளாதார நிலைமையைப் பொருத்திருக்கிறது.

தமிழகத்தில் உள்ள வைத்தியர்கள் மட்டுமன்றி, அரசியல் தலைவர்கள், தமிழ் பேரறிஞர்கள் எல்லோருமே இப் பணியில் பங்கு கொள்ள வேண்டியதவசியம். ஆகையால் எல்லோரும் இப் பணிக்காக தங்களாலியன்ற பொருளுதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ் விழாவை யொட்டி உங்கள் ஆலோசனைகளைக் கூறவேண்டுமென்று உங்களை அழைக்கிறேன்.

தலைவர் உரைக்குப்பின், திருவாளர்கள் மருதமுத்து, தமிழ் நாடு நாட்டு வைத்தியர்கள் மத்திய சங்கத்தின் தஞ்சை மாவட்டச் செயலாளர் சித்தமருத்துவமணி - நாவலர் எம். எஸ். ராஜன், டாக்டர் ஆனந்த குமார், பண்டித மருத்துவ மணி முதலியோர் தத்தம் கருத்துக்களை தெரிவித்தனர்.

தமிழகத்திலுள்ள வைத்தியப் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசியல் தலைவர்கள் இவர்கள் பலர் கையொப்பமிட்ட ஒரு வேண்டுகோள் விடுத்து பொருள் திரட்டுவதென்றும், நிதி அனுப்புகிறவர்கள், "பண்டிட் ஆனந்தம் வைர விழா அலுவலகம், 10 ராகவய்யா வீதி, தி. நகர், சென்னை-17" என்ற முகவரிக்கு அனுப்பு வேண்டுமென்றும், இதற்குப் பொருளாளராக டாக்டர் - ஆனந்த குமாரை நியமிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேறியபின், தலைவர் நன்றியுரையுடன் கூட்டம் கலைந்தது.

# சித்த வைத்திய சிறப்பு மருந்துகள்

## புது உருவம்

### கூஷ்மாண்ட் அல்வா

சரீர புஷ்டி உண்டுபண்ண
மனக்கவலை போக்க
உடல் சூட்டை தணிக்க
உற்சாகம் காட்ட

*காற்றுப் போகா டின்களில் வெண்பூசணி மற்ற சரக்குகளும் சேர்க்கப்பட்ட* **அல்வா.**

**450 கிராம் டின் ரூ. 4-80**

### ஸ்பெஷல் பர்ஃபி

தேங்காயின் சத்தும், ஊட்ட சத்துக்களும் சேர்த்து கேக் மாதிரி தயாரிக்கப்பட்டது. ஜீரண சக்தியை வலுப்படுத்தி நரம்புகளுக்கு ஊட்டமளிக்கும்.

**450 கிராம் டின் ரூ. 4-80**

### வாழைத்தேன்

சித்த வைத்தியத்தின் சிறப்பு உணவு. ஊட்ட சத்துக்களுடன் கூட டியூப்களில் அடைக்கப்பட்டிருக்கிறது.

**150 கிராம் டியூப் ரூ. 1-95**

## டாக்டர் நிவாஸ் கெமிக்கல்ஸ்,

பார்மகுடிகல் மானுபாக்சரர்ஸ், நியூட்ரீமெண்ட்ஸ்,

32, கமலாலயம் வடகரை,

## திருவாரூர்.

த. பெ. எண் 19 (தஞ்சை மாவட்டம்) தொலை பேசி. 142

# அலுமினிய பற்பம்

டாக்டர் எஸ். சீனிவாசன்,
நிவாஸ் கெமிக்கல்ஸ், திருவாரூர்

அலுமினியம் ஓர் உலோகம். படிக்காரத்தில் அலுமினியம் சேர்ந்திருக்கிறது. படிகார சுன்னம், படிகார பற்பம் சித்த வைத்தியர்களுக்கு மிகவும் பழக்கமானது. ஆனால் படிகாரத்திற்கும், அலுமினியத்திற்கும் அனேக வித்தியாசம் இருக்கிறது.

அலுமினியத்தை பற்பமாக்கி முதன் முதலாக உபயோகத்திற்கு கொண்டுவந்தது நமது லாபரடாரியில்தான். ஏன் இதை பற்பமாக்கினோம் என்பதுபற்றி நீங்கள் அறிய ஆவலாயிருக்கலாம். அலுமினியம் நாம் அறிந்தவரையில் இதுகாறும் வேறு சித்த வைத்தியப் புத்தகங்களிலோ, அல்லது சித்த வைத்தியர்களின் அனுபவத்திலோ காணப்படவில்லை.

ஆனால் ஆங்கில வைத்தியர்கள் அலுமினிய பற்பத்திற்கு சமானமான, அலுமினியம் ஹைட்ராக்சைட் மருந்தைக் கொடுக்கிறார்கள்.

அலுமினியத்தின் குணங்கள் பல உண்டு. பொதுவாக வயிற்றில் ஏற்படும் புண்கள், குன்மவலி, மந்தம், வயிற்றுவலி, நெஞ்செரிச்சல் நெஞ்சில் வாயு அடைப்பது போன்ற வலி, வயிற்றுப் பொருமல், வயிற்றில் வாயு, வாயு உப்புசம், புளிச்ச ஏப்பம், அசீரணம், செரியாமை, பித்தமான வாந்தி, ரத்தமான வாந்தி, வாந்தியுடன் வயிற்றுவலி இவைகளுக்கெல்லாம் அலுமினிய பற்பம் சிறப்பாகப் பயன்படும்.

சித்த மருந்துகளென்றால் ஜனங்களுக்கு பொதுவாக நம்பிக்கை குறைந்திருப்பதற்கு காரணம் சித்த வைத்தியர்களாகிய நாமேதான். சித்த மருந்துகளை விஞ்ஞான முறைப்படி தயாரித்து குறிப்பிட்ட ரோகங்களில் மட்டிலும் நிதானம் அறிந்து கொடுத்துவர வேண்டும். பழங்காலத்து வைத்தியர்களோ, சித்தர்களோ எப்படி கையாண்டிருந்தாலும் சரி, தற்காலத்தில் விஞ்ஞானம் மேலும் மேலும் வளர்ந்துகொண்டிருக்கும் தருணத்தில் நாமும் விஞ்ஞான முறைப்படி மருந்துகளை தயாரித்து, கையாள வேண்டும் என்பதே கடமையாகும்.

அலுமினிய பற்பம் விஞ்ஞானப் பாதையில் முதற்படியாகும். சித்த வைத்தியம் அறிந்த யாவரும் இதை உபயோகிக்க மேலே சொன்ன ரோகங்களில் நல்ல பலன் அடைவார்கள். ஜனங்களுக்கும் மருந்துகளில் நம்பிக்கை விழும்படியாக அதன் தரமும், உருவமும் (அதாவது மாத்திரை ரூபம்) தக்க முறையில் அளவுடன் ஆக்கப்பட்டிருக்கின்றன.

சிற்க அலுமினிய பற்பம் செய்முறையை சுருக்கமாக இங்கு விளக்குகிறோம் :

அலுமினியத் தூள் - இதை கற்ருழைச் சாற்றில் 7 நாள் ஊற வைத்து பிறகு காய்ச்சி வாழைச் சாறில் 7 தடவை தோய்த்தெடுக்கவும், பிறகு கழுவி உலர்த்தவும். இது சுத்தியாகும்.

கரு ஊமத்தைச் சார், கந்தகம்-2, பூரம்-1, சார் விட்டரைத்து சுத்தி செய்த அலுமினியத் தூள்-1 பங்குடன் தொந்தித்து புடமிடவும். பிறகு ஒவ்வோர் தடவையும் கரு ஊமத்தைச் சாருடன் மேலே சொன்ன கந்தகம், பூரம் சேர்த்து சேர்த்து 7 புடமிடவும்.

பிறகு இந்துப்பு, நவச்சாரம், வெள்ளைக் குங்கிலியம் சம பங்கெடுத்துக் கொண்டு அத்துடன் இஞ்சிச் சார், வெள்ளுள்ளிச் சார், நெல்லிச் சார், கத்திரிக்காய் சார், ஆடு தீண்டாம்பாளைச் சார், இவைகள் சேர்த்து புடமிட்ட அலுமினியம் சம பங்கு சேர்த்து 7 புடமிடவும். ஒவ்வொரு தடவையும் மேற்படி சரக்குகளும், சேர்க்கப்பட வேண்டும். 23 புடம் போதும்.

அருமையான பற்பம் கிடைக்கும்.

பத்தியம் கிடையாது ஆனல் அதிக சர்க்கரை, அதிக உப்பு, அதிக கொழுப்பு ஆகாரம் உதவாது.

தினம் காலை, மாலை இரண்டு மிளகு அளவு கொடுக்க சகலவித குன்மமும் தீரும்.

அனுபானமாக சாமந்திப் பூ, தேக்கு இலைச் சாறு, இவைகள் கொடுக்கப்பட வேண்டும்.

மாத்திரைகளாக கொடுத்தால் அனுபானம் வேண்டாம். (டாக்டர்கள் இதனை உபயோகித்து அவரவர்கள் அனுபவங்களை தயவு செய்து எங்களுக்கு எழுத வேண்டுகிருேம்.)

---

## காஞ்சி சித்த வைத்திய சங்கம்

### அனுதாபக் கூட்டம்

18-1-66 செவ்வாயன்று காஞ்சி சித்த வைத்திய சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் தலைவர் டாக்டர் சிற்சபை தலைமையில் கூடி கீழ்க்கண்ட அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றின

1. இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் உலக சமாதானத்திற்கும் குறிப்பாக பாரத பாக்கிஸ்தான் ஒற்றுமைக்காகவும் தனது உடலையும், உயிரையும் அர்ப்பணித்து மறைந்ததற்கு இச்சங்க உறுப்பினர்கள் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

2. இச்சங்கத்தின் துணைத்தலைவர் திரு. சுந்தரேச முதலியார் அவர்கள் இயற்கையெய்தியது குறித்து இச்சங்கம் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னுர் குடும்பத்திற்கும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அயம் பொன்னுகும். சித்திகள் பலதரும். இதை சல்லாத் துணியில் முடிந்து வாயில் அடக்க, நீண்ட கால ஜீவிதமும், யானை போன்ற பலமும், சுக்கிலத் தம்பனமும், கெவுன சித்தி முதலான அட்டமா சித்தி தருவதுடன் நரை, திரை, மூப்பு சாக்காடை நீக்கும் என்றும் இளமையாக்கி வைக்கும். ஆனால் சித்த வித்தையாகிய வாசிப் பழக்கமும் வேண்டும். (தொடரும்)


# சுதந்திரா

## கக்குவான் இருமல் மருந்து

### மூன்று நாளில் குணம்

முதல் நாளிலேயே கக்குவான் கிருமிகளையும் சளி கோழையையும் வெளிப்படுத்தி விடும்.

புட்டி 1-க்கு ரூ. 2-00 (V. P. P. கிடையாது. தேவைக்கு ரூ. 3-00 மணியார்டர் அனுப்பவும்.

(S. V. R. கண்டர் சன்ஸ்) வைத்தியர்)

**S. R. பூபதிராஜா R. A. M. P.**

சித்த வைத்தியசாலை, தம்மண்ண செட்டி ரோடு, அரிசிபாளையம், சேலம்-9.

கிடைக்குமிடங்கள் :

**தேஜ்பால் & கோ.,** 91, நைனியப்பநாயக்கன் தெரு, சென்னை-3.

**ராஜா மெடிகல் ஹால்** 31, தர்மராஜாகோவில் தெருவு, பெங்களூர்-1.

**சொக்கநாத செட்டியார்,** நாட்டு மருந்துக்கடை திருப்பா புலியூர், கடலூர் N. T.

**வல்லராம் நாடார் & சன்ஸ்,** 188-A, தாராவி ரோடு, பம்பாய்-17.

## நன்கொடை

"நந்தி"யின் சென்ற மாதமணி வெளியான பின் கீழ் குறிப்பிட்டுள்ள அன்பர்கள் "நந்தி"யின் வளர்ச்சிக்கு நன்கொடையளித்துள்ளார்கள். அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றி. அன்பர்கள் மேலும் நன்கொடை உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். காகிதம், அச்சுக்கூலி முதலிய எல்லா விதத்திலும் விலைவாசி ஏறியிருக்கும் இத்தருணத்தில் சந்தாவை மட்டும் நம்பி பத்திரிகை வாழமுடியாதென்பது அன்பர் அறிந்த விஷயம்.

| | | | |
|---|---|---|---|
| சித்த வைத்தியர் | ஜாண். மணப்பாறை | ரூ. | 10-00 |
| ,, | டி. எஸ். துரைராஜ், திருச்சி | ,, | 10-00 |
| ,, | பி வி. சிதம்பரம், திருச்சி | ,, | 10 00 |
| ,, | கே. இராமச்சந்திர ராஜா கிராப்பட்டி, திருச்சி | ,, | 5-00 |

---

## துறையூர் தமிழ் சித்த வைத்திய சங்கம்

**2-1-66-உ மாலை 3 மணிக்கு S. P. G. பாடசாலை கட்டிடத்தில் துறையூர் நகரசபைத் தலைவர், திரு. T. B. C. பாலுசாமி அவர்கள் தலைமையில் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. பல பாகங்களிலிருந்து சித்த வைத்தியர்கள் வந்திருந்து கீழ்க்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றினர்.**

ஆசிரியரிடம் 4 ஆண்டு பயிற்சிபெற்ற பரம்பரை வைத்தியர்கள் பதிவை வாய்மொழி தேர்வு இல்லாமல் 1937-ல் பதிவு செய்தது போல் Go. No. P, H. 231/1933படி பதிவு செய்யவேணுமாய் மாநில சர்க்காரை சங்கம் மிக பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறது.

சுமார் பத்தாயிரத்துக்கு மேல் தகுதி வாய்ந்த வைத்தியர்கள் பதிவு பெறுமல் பின்தங்கி இருப்பதாலும் ஷையார்கள் வெளி ஊர்களுக்கு சென்று பழக்க வழக்கமில்லாததினுலும் பொருளாதாரம் மிக குறைவுபட்டு இருப்பதாலும் ஷை வாய்மொழி தேர்வை ஆங்காங்குள்ள சங்கங்களின் மூலம் தேர்வு பெற்ற வைத்தியர்களைக் கொண்டோ அல்லது சர்க்கார் அதிகாரிகளைக் கொண்டோ அந்தந்த மாவட்டத்திலேயே தேர்வு நடத்த வேணுமாயும்

கிராமாந்தரங்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலுமிருக்கும் மருத்துவ நிலையங்களுக்கு பதிவுபெற்ற வைத்தியர்களை நிரந்தரமாக நியமிக்கும்படி அரசாங்கத்தாரை சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.
ம. ரா. காசிநாதன், R. M. P., துறையூர், செயலாளர்.

# குறட்பாவின் திறப்பாடு

வ. பெருமாள், எம்.ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம்,
கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்.

**ஆண்மையின் தன்மை:**—ஆளும் தன்மையே ஆண்மை எனப் படும். அத்தகைய ஆண்மையைப் பேராண்மை, சான்றாண்மை, ஊராண்மை என்று முப்பெரும் பிரிவுகளாக வள்ளுவனார் வகுத் திருக்கின்றார். பிறன் மனைவியைக் காம நோக்குடன் பார்க்காத உயர் பண்பே பேராண்மையாகும். இத்தகைய பேராண்மை சான்றோர்க்கு மேலும் சிறப்பளிப்பதாகும். "பிறர் மனைவியரைப் பெற்ற தாயெனவும்" என்பது வில்லிப்புத்தூரார் வாசகம். 'குற்றம் செய்தவன் தண்டிக்கப் படுவான்" என்று சொன்னால் 'குற்றம் செய்தவள் தண்டிக்கப் படுவாள்" என்று பொருள் படுவது போல, பிறர் மனைவியை ஆடவர் நோக்கக் கூடாது என்று சொன்னால் பிற ஆடவரைப் பெண்டிர் நோக்கக்கூடாது என்பது குறிப்பு. இத்தகைய பெரும் பெண்மையைக் 'கற்பு என்னும் திண்மை' என்பார் வள்ளுவனார். சுசீலையின் நிறையைப் பற்றிப் பகருமிடத்து "பேசுதிண் கற்பு வாய்த்தாள்" என்று தேவராசப் பிள்ளை மிக அழகாகச் சித்தரித்துக் காண்பிக்கின்றார்.

> " ஓவியர் நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
> தேவியை யாம் அழைத்திட ஆண் சித்திரமேல் நான் படுதேன்
> பாவையர் தம் உருவமெனில் நீர்பார்க்க மனம் பொறே
> னென்றான்
> காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால்."

சால்பை ஆளும் தன்மை சான்றாண்மை எனப்படும். தான் எவ்வளவு வறுமையுற்ற போதிலும் தன் உயர்ந்த நிலையிலிருந்து சற்றும் வழுவாத மனச் செம்மையாளனே சான்றோன் எனப் படுவான். அத்தகைய பெருந்தகையாளன் சான்றாண்மைக்கு ஆழி என்று உலகோரால் பாராட்டப் படுவான். பெருந்தலைச் சாத்தனார் இளங்குமணனால் கானகத்திற்கு அனுப்பப்பட்ட குமண வள்ளலை அடைகின்றார். அவனைப் பரிசில் தருமாறு வேண்டு கின்றார். அவன் பாவலர்க்குப் பகர்கின்ற மாற்றம் அவன் சான்றாண்மைக்குத் தக்க சான்றாக அமைகின்றது.—ஆம். இதோ அக்காட்சி.

> " அந்நாள் வந்திலை அருந்தமிழ்ப் புலவோய்
> இந்நாள் வந்துநீ நொந்தெனை அடைந்தாய்,
> தலைதனைக் கொடு போய்த் தம்பிகைக் கொடுத்து அதன்
> விலைதனைப் பெற்றுன் வறுமை நோய் களையே."

ஊழி பெயர்ந்தும் தன் வேளாண்மையினின்றும் சற்றும் வழுவாத சீதக்காதியின் சான்றாண்மை வள்ளுவர் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்கின்றது.

" ஓர்தட்டிலே பொன்னு மோர்தட்டிலே நெல்லு மொக்கவிற்கும்
கார்தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினுங் தட்டு வராம லேயென்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால் சீதக்காதி வரோதயனே."
ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்", என்பது வள்ளுவனர் வாய்மொழி.

பகைவர்க்கு ஊறு ஒன்று உற்றக்கால் உடனே உதவும் உத்தமப் பண்பே ஊராண்மை எனப்படும். இத்தகைய ஊராண்மை அயோத்தி வேந்தன் இராமனிடம் அமைந்திருந்ததாகக் கம்பர் பாடல் பகர்கின்றது. இராவணன் படைக்கலமிழந்து தன்னந்தனியே நிற்கும் காட்சியைக் கண்ணுற்ற இராமன் "இன்று போய் போர்க்கு நாளைவா", என நல்கினன். சீலம் நதிக்கரையில் புருடோத்தமனை வென்ற அலெக்சாண்டரிடம் ஊராண்மை சிறந்து விளங்கியதை வரலாற்றில் காண்கின்றோம்.

" பேராண்மை என்ப தறுகண் ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

**விரைவுச் சுவை:—**

" நகையே அழுகை குளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பால் எட்டே மெய்ப் பாடென்ப"

என்ற தொல்காப்பியனரின் இலக்கணத்தில் விரைவுச்சுவை இடம் பெறவில்லை. இருந்தாலும் இச்சுவை தமிழ் இலக்கியத்தில் ஆங்காங்கு மிளிர்வதை நாம் காணலாம். நட்பின் திறத்தை விளக்கப் போந்த பேராசிரியர்,

" உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று விரைவுச் சுவையுடன் கூறுகின்றார். காதலன் பிரியுங்காலை காதலி பிரிவாற்றாமையினால் கூறும் சொற்களிலுள்ள விரைவுச் சுவை நவில் தொறும் நயம் பயப்பதாகும்.

"உவக் காண் எம் காதலர் செல்வார் இவக்காண் என்
மேனி பசப்பூர்வது" (பசப்புறு பருவரல்)

" கிளையினிற் பாம்பு தொங்க விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக் கீழுள்ள விழுதையெல்லாம்

ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி உச்சிபோய்த் தன்வால்பார்க்
கும்''

என்ற பாரதிதாசன் கவிதையில் விரைவுச் சுவையுடன் நகைச் சுவையும் கலந்திருக்கின்றது.

### வள்ளுவர் நூலுக்கு வள்ளுவரே உரையாசிரியர்:

வள்ளுவனார் தீட்டியுள்ள குறட்பாக்களுக்கு விளக்கவுரையும் விரிவுரையும் அவர் பனுவலிலேயே பொதிந்துள்ளன: ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டு ஆராய்வோம்.

'' மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற''

'மாசு' என்றால் என்ன? என்ற வினாவை எழுப்பி, அதற்கு விடையை அடுத்த குறளில் அழகாக அமைத்துக் காட்டுகின்றார்.

'' அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்''

'மாசு' என்பதற்கு அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய சொற்கள் விரிவுரையாக அமைகின்றன. இற்றைய இளை ஞர்கள் பிறகு அறம் செய்யலாம் என்று கருதாது இன்றே செய்ய வேண்டும் என்பது ஆசிரியரின் திரண்ட கருத்துரை.

'' அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.''

ஏன் அன்றறிவாம் என்று எண்ணலாகாது என்ற ஐய வினாவிற்கு வள்ளுவனார் மாற்றம் பகர்கின்றார்,

'' நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு.''

'நெருநல் உளனொருவன் இன்றில்லையாதலின் அன்றறிவாம் என்னாது இன்றே அறஞ் செய்க' என்பதே வள்ளுவரின் திரண்ட தெளிவுரை. 'கல்வி' என்ற அதிகாரத்தில் அமைந்துள்ள பத்து குறட்பாக்களிலும் ஆசிரியர் கல்வியின் இன்றியமையாமையைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். அவற்றின் அமைப்பு ஒரு குறள் மற்றொரு குறளுக்கு உரையாக அமைகின்றது. எடுத்த எடுப்பிலேயே ஆசிரியர்,

' கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.''

என்று உரைக்கின்றார். 'எதைக் கற்பது'? என்ற வினாவை எழுப்பி 'கற்பவை' என்ற சொல்லிற்கு 'எண்ணும் எழுத்தும்' என்று அடுத்த குறட்பாவில் விரிவுரை தருகின்றார்.

" எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

எண்ணெழுத்து கற்ற மாந்தர்க்கும் அஃதறியாதார்க்கும் உள்ள முரண்பாடு அடுத்த குறளில் விளக்கப்படுகின்றது. கற்றோர் முகத்திலிருப்பது கண். கல்லாதார் முகத்திலிருப்பது புண்,

" கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

'எண், எழுத்து' ஆகிய இரண்டையும் கற்ற புலவரின் தொழில் என்ன ? என்ற கேள்விக்கு அடுத்த பாவில் மாற்றம் அமைகின்றது இதோ பொய்யில் புலவரின் பொருளுரை :—

" உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்."

புலமைக்குரிய கல்வியை ஒருவன் எவ்வாறு கற்கவேண்டும் என்று கேட்போமாயின் செந்நாப்போதார் செப்புகின்ற மாற்றம் இது தான். ' செல்வன் முன்பு வறியவன் அடக்கத்துடன் நிற்பது போன்று ஆசிரியனுக்குத் தக்க மதிப்பளித்து பனுவலைப் பயிலல் வேண்டும்."

" உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்."

ஒருவன் அவ்வாறு கற்றால் எவ்வாறு அறிவு வளரும் என்ற வினவைத் தானே எழுப்பி அதற்கு விடை பகர்கின்றார். தோண்டத் தோண்ட ஊறும் மணற்கேணியைப் போன்று ஒருவன் கற்குந் தோறும் அறிவு ஊறும்.

" தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

பல பனுவல்களையும் பயின்று, மாண்ட அறிவைப் பெற்றவன் இவ் வையத்தில் எங்ஙனம் சிறப்பிக்கப் படுவான் என்று ஆராயுமிடத்து அவனுக்கு எந்நாடும் எவ்வூரும் தன்னுடையதாகவே அமையும்,

" யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு."

இந்த வையத்தில் ஒருவன் சிறப்படையக் காரணமாயிருக்கின்ற கல்வியினால் கற்றவனுக்கு உண்டாகும் பயன் யாது என்று நோக்குமிடத்து ஒருவன் ஒருமுறை கற்ற கல்வி அவனுக்குப் பல இடங்களிலும் பல பருவங்களிலும் பல்வேறு காலங்களிலும் பயன்படும் என்பது ஒரு தலை.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து." " அறஞ்செய விரும்பு"

என்ற அவ்வையாரின் வாசகத்தைச் சிறு வயதில் கற்ற ஒருவனுக்கு, அவனுடைய முதிய வயதிலும் அத் தெளிவுரை அவனுக்கு அறிவுறுத்துவதன் மூலம் ஏமாப்பளிக்கின்றது என்பது இங்கு சிந்திக்கத் தக்கது. 'எழுமையும்' என்ற சொல்லிற்குப் பலவாகிய எண்ணிற்கு ஒன்றைக் காட்டியவாறு எனக் கொள்ளினும் அமையா நிற்கும். ஒருவனுக்கு ஏமாப்பளிக்கின்ற கல்வியை மேன் மேலும் கற்பதற்கு ஊக்கமளிப்போர் யார் என வினவின், உலக மாந்தரே கற்போருக்கு ஊக்கம் அளிப்போராவர் என்பது ஆசிரியரின் அரிய மாற்றமாகும்.

> "தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்."

இவ் வையத்தில் எவ்வளவோ செல்வங்கள் இருந்தும் அவற்றைப் பெற விழையாமல் கல்விச் செல்வத்தைமட்டும் ஒருவன் ஏன் இவ்வளவு முயன்று பெறவேண்டும் என்று கேட்பின் ஆசிரியர் விடுக்கின்ற மாற்றம் இதுதான்,

> "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை."

எனவே, வள்ளுவனார் உள்ளத்தை அறிய வேறு உரைகள் வேண்டா. நாம் நுண்மாண் நுழைபுலத்துடன் குறட்பாவைப் பயிலுவோமேயானால் வள்ளுவரின் வாய்மொழியைத் தெள்ளத் தெளிவாக உணர முடியும்.

## நட்பும் கெழுதகைமையும்

கிழமையின் தன்மையே கெழுதகைமை எனப்படும். கிழமை என்பது உரிமையாகும். இல்லத்திற்குரிய இல்லாளை இல்லக் கிழத்தி எனக் கூறுவது தமிழ் மரபு. கெழுதகைமை தோழமையின் சிறந்த உறுப்பாகும். இத்தகைய நட்பின் உரிமையைச் சிறிது காண்போம். இராமன் கானகத்திற்குச் சென்றதனால் பலருடன் தோழமை பாராட்ட நேரிட்டது. அவர்களில் குகன், சுக்ரீவன், வீடணன், ஆகியோர் குறிப்பிடத் தக்கவர். வீடணனும் இராமனும் ஒருவரை ஒருவர் கண்ட அளவிலேயே "ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே" என்பதற் கேற்ப சிறந்த தோழர்களானார்கள். அப்போது இராமன் வீடணனை நோக்கி "நான் காட்டிற்கு வந்ததால் உன்போன்ற பலருடன் நட்புப் பூண்டு நான்கு உடன் பிறந்தவர்களாகிய நாம் நின்னொடு எழுவரானோம்; எனவே தசரதன் 'மைந்தர்களால் பொலிவுற்றான்'' என்று கூறுகிறான். தசரதனை (தன்) தந்தை என்று கூறாது வீடணனிடம் 'உந்தை' என்று கூறுகின்றான். நட்பின் கெழுதகைமை இராமனிடம் சிறந்து விளங்கிற்று.

> "குகனொடும் ஐவ ரானேம் முன்பு, பின் குன்று சூழ்வான்
> மகனொடும் அறுவ ரானேம்; எம்முழை யன்பின் வந்த

"அகனமர் காத லைய நின்னொடும் எழுவரானோம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தான் நுந்தை.''
(கம்பர்)

அன்புச் செல்வி மாதவி தான் ஈன்ற மகளாகிய மணிமேகலையைக் குறிக்குமிடத்து " மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை '' என்று கூறுகின்றாள். அவள் கண்ணகியின் பால் கொண்ட நட்பின் திறத்திற்கு அவள் கெழுதகைமையே தக்க சான்றாக அமையா நிற்கின்றது. கானகத்தில் உறைந்த குமணனிடம் பைந்தமிழ்ப் பாவலர் பெருந்தலைச் சாத்தனார் செல்கின்றார். தம் நல்குரவை ஒரு சொல்லோவியமாக எடுத்துச் சித்தரித்துவிட்டு இறுதியில் " உன்னை வளைத்தாவது பரிசில் பெறாது விடேன்'' என்று வள்ளலிடம் மொழிகின்றார். புலவரின் கூற்று அவருடைய நட்பின் கெழுதகைமைக்குச் சான்று பகர்கின்றது.

" என்னிலை யறிந்தனை யாயின் இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமைய லென் '' (புறநானூறு)

இத்தகைய நட்பின் உயர்ந்த உரிமையைத்தான் திருவள்ளுவர்,

" நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்.''

என்று தெளிவாக வரையறுத்துள்ளார். பாரிவள்ளல் உயிர் நீத்த பிறகு அவனுடைய தோழரும் புலவருமாகிய கபிலர் பாரி மகளிரைப் பாதுகாத்து வந்தார். பாரி மகளிரைப்பற்றி இருங்கோவேளிடம் கூறுங்காலை இரு நங்கையரும் பாரியின் மகளிர் என்று கூறாது தம் மகளிர் என்று மிகவும் உரிமையுடன் கூறுகின்றார்,

" நெடுமாப் பாரி மகளிர் ; யானே
தந்தை தோழன் ; இவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே (புறம்)

## உணர்ச்சியும் புணர்ச்சியும்

நட்பிற்கு அடிப்படையான காரணம் ஒத்த குறுக்கோளும் ஒத்த உணர்ச்சியுமாகும். ஒத்த உணர்ச்சியின்றி பல்லாண்டு கூடி வாழினும் அது நட்பாகாது. ஒரு நாள்கூடப் பழகாவிட்டாலும் ஒத்த உணர்ச்சியே நட்பாக அமையும். கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் ஒருவரை யொருவர் முன்னர் அறியாவிடினும் இருவருடைய ஒன்றுபட்ட உணர்ச்சி அவர்களுடைய விழுமிய நட்பிற்கு அடிகோலியது. சுக்ரீவனும் வீடணனும் தத்தம் தமையன் செய்கையைக் கண்டு வருந்தி இருவரும் இராமன் பக்கம் சேர விழைந்தனர். அல்லவை செய் தொழுகிய இராவணனை விட்டு வீடணன் நீங்கினான். அவ்வாறே சுக்ரீவனும் வாலியின் செயலைக் கண்டு அவனைத் துறந்தான். இருவருடைய உணர்ச்சியும் அடிப்

படையிலேயே ஒத்திருக்கின்றன. உணர்ச்சியால் ஒன்றுபட்ட இருவரும் நட்பினால் உந்தப்பட்டு ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளும் காட்சியைக் கம்பர் சித்தரிக்கின்றார்.

"தொல்லருங் கால மெல்லாம் பழகினுந் தூய ரல்லார்
புல்லல குள்ளந் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே
ஒல்லை வந் துணர்வும் ஒன்ற இருவரும் ஒருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவினர் எழுவின் தோளார்."

பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணிக்கப்பட்ட இராமனும் சீதையும் கண்களால் உரையாடுகின்றனர். அவர்களுடைய உள்ளக் கருத்து, உணர்ச்சி, குறிக்கோள் ஆகியவை முற்றிலும் ஒத்திருக்கின்றன. இந்த ஒத்த உணர்ச்சி அவர்களைக் காதலர்களாக மாற்றுகின்றது. இதோ கம்பர் ஓவியம்:-

"எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை நோக்கிக் கவ்வி யொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."

இத்தகைய உணர்ச்சி இருவரிடமும் ஒத்திருக்குமாயின் அவர்கள் பழகாமலே தலைசிறந்த நண்பர்களாவார்கள் என்பது வள்ளுவரின் தெளிவுரை.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்." (நட்பு)

வள்ளுவனாரின் இலக்கணத்திற்குத் தக்க இலக்கியங்களைச் சங்க நூல்களில் பரக்கக் காணலாம்.

---

## நோயற்ற வாழ்வு

எலுமிச்சம் பழச்சாறு ஒரு கரண்டி, தேன் ஒரு கரண்டி, துளசிச்சாறு ஒரு கரண்டி, சுத்தமான தண்ணீர் ஒரு அவுன்சு. இவை கலந்து தினமும் காலை ஆகாரத்திற்கு முன் சாப்பிடவும். நோயின்றி சுகவாழ்வு வாழலாம்.

# திருக் குறட் கடவுள்

## சிவயோகத் தெளிவுரை

தமிழ் சித்தர், வைத்திய சரபம்,
கவிராஜ் E. S. இராமசாமி ஜோதிடர், எரிசினம்பட்டி

பகவன் :—பகவர்னே ஈசன் மாயோன் பங்கயன். (நிகண்டு)
ரம் :—ரமித்தல், சந்தோஷித்தல், இன்பநிலே நிற்றல். ராம்:
ரம் :—ஒடுக்கம், நிவர்த்தி, குறில், தாரகம்.
ராம் :—தோற்றம், விருத்தி, நெடில், திருமால்.
எழுத்து :—சித்திரம்.

"ஆதி பகவன் முதற்றே உலகு எல்லாம் எழுத்து"
ஆதி பகவன் முதல் உலகம் வரை யாவும் (ஜகத்) சித்திரம்

'கண்ணுடிப் பிரதி பிம்பம் போன்றது ஜகத் (ஞானவாசிட்டம்)
ஜகத் பிரதி பிம்பம் என்ருல்—இதற்கு மூல உருவம் எது!
(எங்கே!)

புறத் தோற்றமாகிய ஜகத் வடிவிற்கு மூலப் பொருள் (உருவம்)
அகத்தே விளங்கும் (ரம்) தாரகப் பிரமமேயாம்.

"அக,ரம் முதல."

(அ - ம்) ஆதி பகவன் முதற்றே உலகு எல்லாம் எழுத்து
அக ரம் முதல.

(இ - ள்) ஆதி பகவன் முதற்றே உலகு எல்லாம் சித்திரம்
இதற்கு மூலப் பொருள் அகத்தே விளங்கும் தாரகப்
பிரமமே ஆம்.

"ஓர்த்து உள்ளம் உள்ள துணரின் ஒரு தலேயாப்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு."

"அகர முதலவெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு."

"நிலேயிற்றிரியா தடங்கியான் ருேற்றம்
மலேயினும் மாணப் பெரிது,"

"தன்னே யறியு மறிவு தனேப் பெற்ருல்
மன்னு பிறப்பில்லே வீடு."

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.

"பொருளல்லவற்றைப் பொருளென்று ணரும்
மருளால் ஆம் மாணுப் பிறப்பு."

# நிஜானந்த போதம்

(தில்லை ஆர். விஜயன்)

**சென்னை, தூசி நெடுஞ்சாலை, ஜோதி சித்த வைத்திய நிலையத்தின் அதிபரும், தமிழ் இலக்கியத்தில் பி. ஓ. எல். பட்டம் பெற்றவருமான புலவர், திரு. தில்லை. ஆர். விஜயன் அவர்கள் "நந்தி"யில் தொடர்ந்து கட்டுரை யளிப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் வாசகர்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம். — ஆசிரியர்.**

## நிஜானந்த போதம் (சித்த வைத்தியனின் முக்கிய கடன்)

### சித்தர்கள் வணக்கம்

*சிரார்ந்த துணர் மலியுதளிகன் பண்பாடடவி திகழ்கின்ற பொதிகை முனிவா, திவ்யகுண போகர் நந்தீசர் புண்ணாக்கீசர் சில கருவூரரெங்கும் பேரானந்த சுந்தரானந்தர் திருமூலர் மிகு பெருமை சேர் கொங்கணமுனி பிரமமுனி ரோமமுனி வாசமுனி யமலகுரு பிரம முனி கமலமுனிவர் ஏரானந்த கோரக்கர் சட்டமுனி மச்சமுனி யிடைகாடர் காளாகியோ டின்னமுயர் முத்தருயர் முத்த நவநாதர் புவியிவர் மரபினுற்ற புனிதர் காரார்ந்த கந்தரக் கடவுளடியார் மலரக் கண்ணடியாரிவர் கடங்கன மிருந்திடுவனச பாதமலரென்றெண கருத்தி லஞ்சலி செய்குவாம்.*

*நமது முன்னோர்களான சித்தர் பெருமான்கள் பின்வரும் சந்ததியாகிய நமக்கென அருள் கூர்ந்து மணிமந்திர ஔடதமாகிய மூன்று வழிகளை நமது நல் வாழ்விற்கென அருளிச் செய்தனர். இம் மூன்றினையும் சேர்த்தோ சிலவற்றைமட்டுமோ நம் சக்திக்கேற்ப நாம் கடைப்பிடித்து அனுபவித்து வருகிறோம். ஆயினும் இம் மூன்றினுக்கும் மிக முக்கியமானது உயிராக இருப்பது என்ன என்பதே தெரியாமல் இருப்பவர்கள் பலர் தெரிந்து நடப்பவர்கள் மிகச் சிலரே, ஆகையால் 'நந்தி'யின் வாயிலாக அனைவரும் தெரிந்து கொள்ளவே எளிய நடையில் சுருக்கமாக எழுதுகிறேன்.*

*நாம், நம்மை அறிந்துகொள்ள வேண்டும், (அதாவது நம்முள் உள்ள சக்திகளை அறிந்துகொள்ள வேண்டும், அதற்கு நம்மிடத்தே உள்ள மும் மலங்களாகிய, கோபம், ஆணவம், ஆசை, இம் மூன்றையும் விடுத்து, பொய்யுரைக்காமலும் புறம்பேசாமலும் நல்லொழுக்கத்தோடு ஆத்ம சிந்தனை செய்யவேண்டும். அப்போதுதான் தன்னைத்தானறிய முடியும்.*

*தானாகி தான்முடிந்த சூட்சந்தன்னை*
*தரணிதனி லறியாமல்தான் தானென்று*
*ஊனாகின்ற திரு உடலைக் காணான்*
*உடலின்னின்ற வட்சரத்தி னுருதிகாணான்*

ஆணுகி நின்ற திருவர்சி காணுன்
அமர்ந்து நின்றவாசிதிரு நயனங்காணுன்
வாணுகி நின்றஅடி முடியுங் காணுன்
மதிகெட்டு விதியழிந்து மாளுவானே.

மணிமந்திர ஔடத பரிகாரமாகிய மூன்றில் சரமாகிய வாசியின் நிலை தெரிந்து அவ்வனுபவத்திலிருந்து பிணியாளனின் வியாதியை அறிவாலறிந்து கண்களால் பார்த்து ஸ்பரிசத்தால் தொட்டு வாசியினுல் நீக்குவதே மணிமந்திர பரிகாரமாகும். மருந்துகளால் வியாதியை நீக்குவதாக இருப்பினும், அம் மருந்தினுக்கும், மருத்துவனுக்கும், ஜீவ அணுக்கள் நிறைந்திருக்க வேண்டிய காரணத்தால், சர அப்பியாசம் அவசியம் தேவை யிருப்பதால் அதற்குரிய அனுபவிகளுடைய சொற்படி ரேசக, பூரக, கும்பக மின்னவை யென்றுணர்ந்து அடைவதே நன் நிலையாகும்.

பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், மகேசர் சதாசிவமான பஞ்ச மூர்த்திகள் மூலாதார கணபதியோடு ஆறு ஆதாரங்களிருப்பதாக மறை கூறுகிறது. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயமும்,(வெட்ட வெளி) சர்வ நால்வகை யோனி வடிவ சீவர்களுக்கும் ஆதாரமா யிருப்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. மிருகாதி மானிடங்களனைவருக்கும் நாசியில் உஸ்வாச நிஸ்வாசமா யுலவிவரும் யிடகலை, பிங்கலை, சுழிமுனை, ஆதாரத்தில் மாறி நடந்துவரும் சத்திசிவ சந்திர சூரியரெனும் சுவாசமான வாசியானது நாள் வொன்றிற்கு 2,1100,600 சுவாசம் நடந்து வருகின்றது. அப்படி நடந்து வருவது மனமாகவும் வாசியாகவு மிருப்பதில் நாள் வொன்றிற்கு 12-வட்டமாயும் சந்திர பாகத்திலும் சூரிய பாகத்திலும் ஐம்பூ தப்பிரிவாய் பிரிந்து காட்டுகின்றன. இப்படி கலையில் நடக்கும் ஐம்பூதம் அந்தகரண வியாபகத்தால் அறிவைத் தோற்றுவிக்காமல் ஆயுளையும் குறைத்து நரை திரைமூப்பை எளிதில் அடையச் செய்கின்றது.

ஐம்பூதப் பிரிவுகளையும், தச நாடிகளின் தன்மையும் அதில் பிராணவாயுவினேடு உட்செல்லும் அமுதநிலையும் நாம் அவசியம் தெள்ளித் தெளிய தெரிந்துணர்ந்து நடப்பதே சித்த பரம்பரையின் கடமையாகும்.

ரேசகம் வன்னி, பூரகம் அப்பு, பிராணவாயவு அம்சம் வாசி, தசநாடிகள் யிருதயத்தினசைவு அறிவு, நேத்திரகருமணி வொளிவு, நாசி மூலமாய் வெளி கழிவது விஷம், ஆகிய கலை ஆகாய சந்திர கிரகணங்கள் முன்னிலையில் அமுதம் உட்புகுவது சந்திர கலையென்றும் உட்செல்லும் அமுதம் உட்சென்று உதிரத்தில் கலந்து உதிரத்தை சுத்தியும் செய்து சீவனுக்கு ஆதாரமாக யிருக்கின்றன. இவ்வமுத பலத்தால் தவசிகள் தேகத்தை போஷித்து நெடுங்கால மிருப்பதாக மதியமுதம் உட்கொள்ளும்படி செப்பி யிருக்கின்றனர் நம் முன்னேர்கள்.

மேலும் கைலாயமென்னும் சுழிமுனை வீட்டில் ஓங்கரித்துக் கொண்டு தலை எழுத்தாக யிருப்பதாக உணர்வு அவை அசைவற நிற்கில் சிவமாம், அசைவுறில் சீவனும், மூச்சாகவும், பேச்சாகவும் ஒலிப்பது சக்தி, இவையே பேசு வெழுத்தென்பது, பேசாவெழுத்து வாசி - பேசுவெழுத்து மனம்.

சாகாக்கால், வேகாத்தலை, போகாப்புனல் என மறை கூறு கின்றது, வாசியாகிய வாயுவையும், ஆகாயமாகிய வெளியையும் ஆவியாகிய (வன்னி என்னும்) நெருப்பையும் குறிக்கிறது. இதை எச்சமய மகான்களும் அடையவேண்டிய திருக்கிறது.

கால் என்பது பிரிதிவு, தலை என்பது ஆகாயம், மத்தீ அப்புடல் வாய்வு, உயிர் அக்கினி, அறிவுமயமாய் நிற்கின்றன.

ஆகாய ரவியினிடத்து உஷ்ண கிரணம் மழை கிரணம் பனிக் கிரணங்கள் உண்டாகியது போல் அறிவினிடத்தில், இடகலை, பிங்கலை, சுழிமுனை, என்னும் மூன்று கிரணங்களுமுண்டாயின. இவைகளை நன்குணர்ந்தால் தன்னைத்தானறிய முடியும். நம்மிட முள்ள அருட்சக்திகளை விருத்தி செய்து அதை அனுபவமாகப் பெறவும் முடியும். அதுவே சித்திகள் எனப்படுவது.

மேலும் சில முக்கிய விபரங்களையும் தெரிந்து கொள்வது நம் தெளிவுக்கு மிக அவசியமானதாகும்.

சரியை கிரியை யோக ஞானமாவன: —

எல்லா உயிரும் தன்னுயிர்போல் எண்ணி அன்புருவாக கருணை உள்ளத்தோடிருப்பது சரியை.

இதை ஜோதி இராமலிங்க அடிகள் கீழ்க்கண்டவாறு பாடி யிருக்கிறார்

எவ்வுயிரும் தன்னுயிர் போலெண்ணி
உள்ளே ஒத்துரிமை கொண்டுவக்கின்றார்
யாவர் அவருளந்தான் சுத்த சித்துருவாய்
எம்பெருமான் திருநடம் புரியுமிடமென
நான் தேர்ந்தேன் அந்த வித்தகர் தம்மடி
க்கு ஏவல் செய்திட என் சிந்தைமிக
விழைநததலே (அருட்பா) என

சரியையைப்பற்றி விளக்கமாக கூறி யிருக்கின்றார். அதுவே மனு நீதி, இதற்கு அடிகள் மனுமுறைகண்ட வாசகமும் எழுதி யுள்ளார்கள்.

குரு மொழி தவறாது நல்லொழுக்கத்தோடு நடப்பது கிரியை எனப்படுவது :—

வேறென்றுமெண்ணாது மனதை யடக்கி அறிவின்வழி நின்று ஒடுங்கி வாசி நிலையில் அமர்வது யோகமாகும்.

" முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே
பத்துவிதம் பறப்பி பஞ்சணையின் மேலிருத்தி
அத்தையடக்கி நிலை யாருமில்லா வேளையிலே
குத்துவிளக்கேற்றி என் கண்ணம்மா
கோலமிட்டுப் பாரேனோ " (அழுகணி சித்தர்)

அதுபோல் மனத்தை அடக்கி அறிவின் வழி நிற்றலே யோகம். இதை நிஜானந்தபோதத்தில் அறிவிற்கும் மனத்திற்குமுள்ள வர்தங்களைப்பற்றி யறியலாம்.

தற்பரமாய், தன்மயமாம் நிற்பதே ஞானமென்பது

அறந்தானியற்று மவனிலுங் கோடி
யதிகமில்லந் துறந்தான் அவனிற்
சதகோடி உள்ளத்துற வுடையோன்
மறந்தாறைக் கற்று அறிவோடிருந்
திருவாதனை யற்றிறந்தான் பெரு
மையை என் சொல்லுவேனிறை
வாகச்சி யேகம்பனே. (பட்டினத்தார்)

அதுபோல் தன்னை மறந்து எல்லாம் தானாகவும் அறிவுச் சுடராகவு மிருப்பதே ஞானம் (தொடரும்)

---

# அகத்திய முனிவர் விழா

9—1—66 அன்று தமிழகத்தின் பல ஊர்களில் அகத்திய முனிவர் விழா சிறப்பாக நடைபெற்றதாக செய்தி கிடைத்திருக்கிறது.

புதுவையில், அகத்தியர் இல்லத்தில் சித்த வைத்தியர் திரு பி. மாசிலாமணி அவர்களின் முயற்சியால் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மதுரை சித்த வைத்திய சங்கத்திலும் விழா சிறப்பாக நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

குடியாத்தம் தாலூக்கா சித்த வைத்திய சங்கத்தினாதரவில் "மேல் மாயில் மருந்து" எனப் புகழ்பெற்றுள்ள நிறுவனத்தின் அதிபர் வைத்தியர் திரு கே. டி. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி அவர்களின் தலைமையில் பள்ளிகொண்டையில் அகத்திய முனிவர் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. கல்வி இலாக்கா உதவி ஆய்வாளர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் அகத்திய முனிவர் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்.

அரக்கோணம் சித்த வைத்தியர் திரு சுந்தரம் பிள்ளை "சித்த வைத்தியத்தில் முப் பூவின் பெருமை" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினார்.

செயலாளர், சித்த வைத்தியர், பசுமாத்தூர் திரு. முத்துக் குமார சுவாமி ஐயர் நன்றியுரை விளம்பினார்.

# மூலிகை மருத்துவம்

("அழகு தவசி")

## சிற்றரத்தை

அரத்தை கோழையகற்றிச் செய்கை யுடையதாகையால் இருமல், ஈளை, சீதளம், மூக்கடைப்பு ஆகிய நோய்களில் கொடுக்கப்படுகின்றது. கப சுரங்களில் தேக வெப்பத்தை போக்குவது மன்றி சளியையும் வெளித் தள்ளும். அரோசிகம், பசியின்மை முதலிய நோய்களில் அரத்தையை உபயோகிக்கலாம்.

**அரத்தையினுல் முடியும் மருந்துகள்:—**

| | |
|---|---|
| அரத்தைப் பொடி | ... அளவு ½—1 கிராம் |
| அரத்தையாதிக் குடிநீர் | ... அளவு 5—60 மி. லிட்டர் |
| அரத்தைக் கருக்கு | ... அளவு 100—300 மி. கிராம் |

### அரத்தைப் பொடி

நன்ருக முற்றித் தேறின சிற்றரத்தை 10 கிராம் எடுத்து ஒரு ஆழாக்குப் பசுவின் பாலில் கால் மணி நேரம் வேகவைத்து எடுத்து, ஆறிய பின் தண்ணீரில் கழுவி உலர்த்தி எடுக்க சுத்தியாம்.

சுத்தித்த அரத்தையை கல்லுரலில் இடித்து தூளாக்கி வஸ்திரகாயம் செய்துகொள்வது.

**அனுபானம்:—** தேன், இருமல், ஈளை, தொண்டைக்கம்மல் ஆகிய நோய்களில் ½-லிருந்து ஒரு கிராம் வரை இரு வேளை கொடுக்கவும். இதனை தனித்தாகிலும், மற்ற கோழையகற்றி செய்கையை யுடைய பொடிகளோடு கலந்தும் கொடுக்கலாம்.

### அரத்தையாதி குடிநீர்

**செய்முறை :**

| | |
|---|---|
| அரத்தை | கோரைக்கிழங்கு |
| கரும்புவேர் | சிற்ருமுட்டி |
| அதிவிடயம் | சீந்தில் |
| ஆமணக்கு வேர் | சுக்கு |
| வசம்பு இலை | தண்ணீர்விட்டான் கிழங்கு |
| தேவதாரு | |

ஆகிய சரக்குகளை சமனெடை எடுத்து கிரமப்படி சுத்தி செய்து, துண்டுகளாகவேனும் பொடியாகவேனும் செய்து முறைப்படி குடிநீர் செய்துக்கொள்ளவும்.

**தீரும் நோய்கள் :—** கீல்வாயு, சந்துவாதம், ஈரித்தலைவாதம், காசம் ஆகிய நோய்கள் தீரும்.

# எனது அருமை நண்பர்களே!

உங்கள் உடல் நலம் பேணுதல் உங்கள் வாழ்வுநிலை உயர்வதற்கு உகந்ததும் அவசியமு மாகும். ஏதேதோ காரணங்களால் எதிர்பாராத பல நோய் நொடிகளுக்கு இலக்காகி கவலையே வாழ்க்கையாக மாறிவிடாமல் இருக்க, வருமுன் காக்கும் நினைவில்லாவிட்டாலும் வந்த பின்னு வது சீரான முறையில் சிகிச்சை பெற்று நலம் பெறுவதற்கு இப்போதே முயற்சித்தால் பய னுண்டு, நல்ல வாழ்வுண்டு. நீங்கள் நேரில் சந் திக்க விரும்பினலும் சரி, விபரம் தெரிவித்துப் பரிகாரம் நாட விரும்பினலும் சரி, கீழ்க் கண்ட முகவரிக்கு உடன் எழுதுங்கள். அதிக உஷ்ணத் தாலும், கண் எரிச்சல், தலைவலி, வயிற்றுவலி மலச்சிக்கல், மூட்டி, முதுகு, இடுப்புவலி, நரம் புத் தளர்ச்சி, சக்தி நலிவு ஆகிய நோய்களுக்கு நிவாரணியாக உள்ள கீழ்க்கண்ட எமது மருந்து களை வாங்கிச் சாப்பிடுங்கள். உஷ்ணம் குறை யும், ரத்தவிருத்தி ஏற்படும், சக்தி வளரும்.

1. நெ. ஸ்பெஷல் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 33-00

2. நெ. கால்சியம் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 23-00

*விபரங்களுக்கு :*

தலைமை ஆபீஸ் :

## சிவராஜ்
## சித்த வைத்திய சாலை

சிவதாபுரம், போஸ்டு

சேலம் 2

# பழனி யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,

# டாக்டர் C. A. ஜெயராம்



அவர்களின்

## சித்த மருந்துகள்

**No. 1. நாகபஸ்பம், காட்டுக்கருணை லேகியம்**

& ஸ்பெஷல் மூல முளைக் களிம்பு. நவ மூலங்களையும் நிர்மூலமாக்கும் 24 வேளை மருந்து செட் 1-க்கு ரூ. 7-50

**தங்க ரேக்கு குளிகை**

நாடி நரம்புகளை வலுப்படுத்தும், வீரியம் தரும் 50 குளிகை ரூ. 7-00

**சிட்டுக்குருவி லேகியம்**

வயோதிகத்தை மாற்றி வாலிபம் தரும். இளமை. உணர்ச்சி, ஆண்மை தரும். 100 Gram ரூ. 10-00

**பெரிய பவழ பஸ்பம் கலந்த சிவனப்பிரகாஷ்**

எனும் நெல்லிக்காய் லேகியம். சகல உஷ்ணம், வெட்டை, குடற் சூட்டைத் தணித்து ஆரோக்கியம் தரும், 400 Gram ரூ. 6-00

**குன்மாதி செந்தூரம் & குன்ம குடோரி லேகியம்**

அஷ்ட குன்மத்தையும் நீக்கும். பலவருட வயிற்று வலியையும் குணப்படுத்தும். 1 செட் ரூ. 15-00

விபரங்களுக்கு :

**டாக்டர் C. A. ஜெயராம்,**

R. I. M. P.

யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,

பழனி.

Telegram : "GURUCURES." P.B. 22 Phone 248

# குரு மருந்துகள்

80 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம், ஆங்கிலம் தமிழ் ஆராய்ச்சி முறைகள் கலந்த — அரிய தயாரிப்புகள்

தலைவலி தைலங்களில் மேலானது

## குரு தைலம்

பல்பொடிகளில் தலைசிறந்தது

## குரு பல்பொடி

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை

குறிப்பு:—போலி பல்பொடிகள் நடமாடுகின்றன கடைகளில் பல்பொடி வாங்கும் பொழுது

**குரு பல்பொடிதானவென்று**

கவனித்து வாங்கவும்.

**டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்,**

குரு மருந்துசாலை : : திருச்சிராப்பள்ளி-1

தபால் பெட்டி 22